# 'Salute' நிகழ்ச்சி
# பங்கேற்பாளர்களுக்கான தகவல்

| | |
|---|---|
| வாய்ப்பு | உங்களுக்காக ஒரு தொடர்பு நபரை ரெட் கிராஸ் பாஸல் லேண்ட் (SRC BL) தேடுகின்றது. இந்த நபர் உங்களுடன் ஜெர்மன் மொழியில் பேசுவார், உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின், அவற்றில் உதவுவார், மேலும் உள்ளூர் பகுதியையும் **அங்கே இருக்கும் வாய்ப்புகளையும்** உங்களுக்குக் காண்பிப்பார். இந்த நபர் ஒரு தன்னார்வலராக இருக்கிறார், அதாவது, அவருக்கு ஊதியம் வழங்கப்பட மாட்டாது.<br><br>தொடர்பு நபர் உங்களுக்குப் பயிற்சியை அல்லது வேலையைத் தேடுவதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் அல்லது கடிதங்களைப் புரிந்துகொள்வதற்கும் உதவ முடியும்.<br><br>கடினமான சூழ்நிலைகளில் அல்லது உங்களுக்கு **சந்தேகமானவிடத்து**, நீங்கள் SRC BL பணியாளரிடம் பேசலாம். உங்களிடம் புதிய தொலைபேசி எண் அல்லது முகவரி இருந்தால், SRC BL பணியாளரிடம் தெரிவிக்கவும்.<br><br>நீங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களை (ஒழுங்கு, நேரந்தவறாமை, உள்ளடக்கம் தொடர்பான ஒப்பந்தங்கள்) கடைபிடிப்பீர்கள். |
| சந்திப்பு மற்றும் காலம் | நீங்கள் தொடர்பு நபரை ஒவ்வொரு 7 அல்லது 14 நாட்களுக்கும் 1-2 மணித்தியாலங்கள் சந்திப்பீர்கள். இந்த ஆதரவு 3-12 மாதங்களுக்கு நீடிக்கும்.<br><br>உங்கள் தொடர்பு நபருடன் சந்திப்பின் நேரம் மற்றும் இடத்தை நீங்கள் சம்மதிக்கிறீர்கள்.<br><br>ஒரு சந்திப்பு நேரம் பொருத்தமானதாக இல்லாவிட்டால், குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு முன்னதாக தொடர்பு நபருக்குத் தெரிவிக்கவும்.<br><br>நீங்கள் சந்திப்புகளை எந்த நேரத்திலும் நிறுத்தலாம். SRC BL பணியாளரிடம் தெரிவிக்கவும். |
| நடைமுறை | • SRC BL உங்களுக்காக ஒரு தொடர்பு நபரைக் கண்டுபிடிக்கும். இதற்குச் சில வாரங்கள் முதல் மாதங்கள் வரை ஆகலாம்.<br>• SRC BL பணியாளர் முதல் சந்திப்பில் கலந்து கொள்வார்.<br>• முதல் நான்கு கூட்டங்களும் ஒரு பரிசீலனை காலம் ஆகும். இதற்குப் பிறகு SRC BL பணியாளர் உங்களைத் |

| | |
|---|---|
| | தொடர்புகொண்டு சந்திப்புகள் நன்றாக நடக்கின்றனவா என்பதைக் கேட்பார். |
| செலவுகள் | இந்தச்வாய்ப்பு இலவசமானது. நீங்களும் உங்கள் தொடர்பு நபரும் உங்கள் சந்திப்புகளில் ஏதாவது செலவிட்டால் (உ.ம், காபி), அப்போது ஒவ்வொருவரும் அவரவர் செலவுகளுக்குப் பணம் செலுத்துவார்கள். |
| தரவுப் பாதுகாப்பு | உங்கள் தொடர்பு நபர் உங்களைப் பற்றியும், SRC BL ஊழியருடனான சந்திப்புகள் பற்றியும், தேவைப்பட்டால், சமூக சேவைகளுடனான சந்திப்புகள் பற்றியும் (அல்லது ORS AG, Convalere AG அல்லது பிற நிபுணர்களுடன்) தகவல்களை வழங்க முடியும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.<br><br>தொடர்பு நபர் உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ள மாட்டார். அதேபோல், தொடர்பு நபரைப் பற்றிய எந்தத் தனிப்பட்ட தகவல்களையும் நீங்கள் பகிர்ந்து கொள்ள மாட்டீர்கள். |